

**தேவையான பொருட்கள்:**

1. 25 பைசா புது மெட்டல் காசு ... 116
   (108ம் வைத்துக் கொள்ளலாம்)
2. கோல்டன் இலை ... 8
3. விருப்பமான சாமி படம் (அல்லது) ஸ்டிக்கர்
4. வெள்ளை பசை
5. கார்ட் போர்டு அட்டை
6. கருப்பு பாப்லின் துணி (அல்லது) வெல்வெட் துணி

**செய்முறை:**

விருப்பமான கலர் துணியை அட்டையில் ஒட்டவும்.

# காசு தேர்

சுதா செல்வகுமார்

1





2

அதன் மீது 25 பைசா காசை ஒட்டவும்.

பெரிய வரிசை ஆரம்பித்தால் இரண்டு பக்கமும் தலா ஒரு காசு வீதம் குறைத்துக் கொண்டே வர வேண்டும்.

உதாரணமாக மேல்வரிசை 13 காசு ஒட்டிவிட்டால் அதற்கும் மேல் வரிசை 11 காசு தான் வரும்.

இதே மாதிரி (13, 11, 9,7,5,3,1) ஒட்டவும். தேரின் மேற்கூரை வந்துவிடும்.

படத்தில் காட்டியபடி (படம் 2) அடுத்த ஸ்டெப் ஒட்டவும்.

பிறகு தேரின் அடிபுறமும், அதன் கீழ் சக்கரமும் ஒட்டி (படம் 3) காசு தேரை அலங்கரிக்கவும்.

தேரின் நடுவில் உங்களுக்கு விருப்பமான சுவாமி படம் பிளாஸ்டிக்கிலோ, ஸ்டிக்கரிலோ ஒட்டி அலங்கரிக்கவும்.

தேவைப்பட்டால் நான்கு பக்கமும் ஜரிகையால் பார்டர் ஒட்டி மேலும் அழகுபடுத்தலாம்.

இதை நாம் சுவாமி அறையில் பூஜைக்கும் பயன்படுத்தலாம்.

பிரேம் செய்து மற்றவர் களுக்கும் அன்பளிப்பாகவும் கொடுக்கலாம். ◆

3



4



# பெயிண்டிங் சம்கி பெல்ட்
## (Sequined Belt)



கு. தேவகுமாரி

சகோதரிகளுக்கு. இம்மாதம் நாம் நவ நாகரீக சிறுமிகளுக்கும், மங்கையர்களுக்கும் ஏற்றவாறு சம்கி பெல்ட் செய்வது எப்படி என்பதைக் கற்றுக் கொள்வோமா?

### தேவையான பொருட்கள்:

1. பெவிக்கிரில் பேப்ரிக் பசை (Fabric Glue)
2. பல்வேறு விதமான சம்கிகள் (Sequins)
3. மெல்□ய ஜர்தோஸி சுருள்கள் (Spiral Strings)
4. 7ம் நம்பர் ஊசி
5. நூல் வேண்டிய அளவு
6. கொக்கி (Hook)
7. வெல்வெட் துணி (Velvet Cloth)

**செய்முறை:** முத□ல் இடுப் புச் சுற்றளவை அளந்து எடுத் துக்கொண்டு அத்துடன் 2 இன்ச் சேர்த்து நீளமாகவும் அகலம் நான்கரை இன்ச் ஆகவும் துணியில் வெட்டி எடுத்துக் கொள்ளவும், நீளப் பகுதி இரண்டையும் சேர்த்து 1/4 இன்ச் விட்டு மெஷினில் தைக்கவும் அல்லது கெட்டித் தையல் போடவும்.



1

2

3

4



5

இப்போது உங்களுக்கு 2 இன்ச் பெல்ட் கிடைக்கும். படம் 1□ல் காட்டியது போன்று உங்களுக்குப் பிடித்த டிசைனைத் துணியில் வரைந்து கொள்ளவும்.

படம் 2□ல் காட்டியது போன்று சம்கிகளை பேப்ரிக் பசை (Fabric Glue) கொண்டு ஒட்டிக் காயவிடவும், படம் 3□ல் காட்டியது போன்று ஜர்தோஸி சுருள்கம்பிகளை தேவையான அளவில் சிறிது சிறிதாக வெட்டி இலை வடிவத்தில் (Leaf Shape) சம்கியைச் சுற்றி ஒட்டவும், பின்பு நன்கு காயவிடவும்.

டிசைன் இல்லாத பக்கத்தில் படம் 4□ல் காட்டியது போன்று Hooks கொக்கியை வைத்துத் தைக்கவும், பெல்ட் தயாராகிவிட்டது அல்லவா?

**குறிப்பு:**

ஜர்தோஸி, கொக்கி இரண்டும் உலோகம் (Metal) என்பதால் ஊசி நூல் கொண்டு தைப்பது நன்று. ◆

# சணல் பானை
## (Flower Vase)

**தேவையான பொருட்கள்:**

1. விருப்பமான அளவில் பானை
2. சணல் ... அரை கிலோ
3. வெள்ளை பசை
4. பூங்கொத்து (தேவைப்பட்டால்)
5. கிளாஸ் கலர் (தேவைப்பட்டால்)

**செய்முறை:**

சணலை படம் 2ல் காட்டியபடி பின்னிக் கொள்ள



1

வேண்டும். ஒரு வளையத்திற்குள் சணலை விட்டு, விட்டு எடுத்தால் பின்னல் வந்துவிடும்.

பெரிய சரமாக பின்னிக் கொள்ள வேண்டும். நீங்கள் எடுக்கும் பானையின் அளவைப் பொறுத்து எத்தனை முழம் வேண்டுமானாலும் பின்னிக் கொள்ளலாம்.

இதை பானையைச் சுற்றி வட்டமாக, நெருக்கமாக ஒட்ட வேண்டும். ஒரு நாள் முழுவதும் காயவிட வேண்டும். இப்பொழுது அழகான சணல் பானை ரெடி. விருப்பப்பட்டால் கிளாஸ் கலர் கொடுத்தும் பானையை மேலும் அழகுபடுத்தலாம்.

**மஞ்சுளா துளசிங்கம்,** கே.கே.நகர்.



3



2



4